**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 113/2023**

பெயர் : ராஜாராமன் P.W.1. Cross

த/பெ. : வைத்தியநாதசாமி

தேதி : 22.01.2026

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:** –

1. நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு பாத்தியப்பட்ட செம்பனார்கோவில் மகாராஜபுரம் அக்ரஹார தெரு, சர்வே எண். 29/1 ல் 4 ½ செண்ட் நிலத்திற்கு பட்டா கோரி தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சர்வே எண்ணில் 38.5 செண்ட் நிலத்திற்கான பட்டா எனது பெயரிலும், எனது அண்ணன் பெயரிலும் வழங்கப்பட்டுள்ளது. எனது பெயருக்கு மேற்படி 4 ½ செண்டிற்கு பட்டா கோரி வட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பம் கொடுத்துள்ளேன் என்றால் கொடுத்துள்ளேன். தாவா சொத்திற்கான எனது பெயரில் உள்ள உரிமை மூல ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன்.

2. பட்டா மாறுதல் கோரி நான் மனுவை வட்டாட்சியர் அலுவகத்திற்கும், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கும் நேரில் கொடுத்தேனா அல்லது தபால் மூலம் அனுப்பினேனா என்றால் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பினேன். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நான் எவ்வளவு சொத்திற்கு பட்டா கோரி ரிட் மனுவை தாக்கல் செய்தேன் என்றால் 43 செண்டிற்கும் பட்டா கோரி தாக்கல் செய்தேன். மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவை பெற்ற பிறகு நான் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரடியாக சென்று பட்டா மாறுதல் செய்யுமாறு கேட்டேனா என்றால் கேட்டேன். அவர்கள் அதற்கு சரியான பதில் கூறவில்லை. இரண்டு முறை சென்றேன். அதன் பிறகு செல்லவில்லை.

3. தாவா சொத்துகளை எனது தந்தையார் வைத்தியநாதசாமி அவர்கள் 08.08.1963 அன்று கிரயம் பெற்றார். எனது தந்தையார் தாவா சொத்தை பொறுத்து எனது பெயருக்கும் எனது அண்ணன் பாலசுப்ரமணியன் பெயருக்கும் வாசாஆ 2 ஆன உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார். தாவா சொத்திற்கான நான்கெல்லைகள் ராஜேந்திரன் வாய்காலுக்கு தெற்கு, புகழேந்தி வீட்டிற்கு கிழக்கு, அப்துல் லா வீட்டிற்கு மேற்கு, தெருவிற்கு வடக்கு ஆகும். நான் சரிவர வட்டாட்சியர் அலுவலகத்தை அணுகி பட்டா

மாறுதல் கோரி விண்ணப்பம் அளித்து அதை தொடர்ந்து பின்பற்றி இருந்தால் வட்டாட்சியர் எனக்கு பட்டா மாறுதல் கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல.